O.S. 197/2022 நாள் 23.01.2026

வா.சா.1 பாத்திமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**–

5 முதல் 7 பிரதிவாதிகளை சீர்திருத்த மனு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தான் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.17 வரையிலான ஆவணங்கள் பதிவு செய்யப்பட்ட விவரத்தை எவ்வாறு தெரிந்து கொண்டேன் என்ற விவரத்தை கூடுதல் பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லவில்லை. 5ம் பிரதிவாதி 14.08.2023 தேதியிட்டு 3ம் பிரதிவாதியிடம் இருந்து 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை கிரய ஆவண எண்.895/2023 மூலம் பெற்ற கிரயமானது நியாயமான கிரயம் என்று சொன்னால் சரியல்ல. 06.03.2024 தேதியிட்ட 3ம் பிரதிவாதியிடம் இருந்து 6ம் பிரதிவாதி 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை கிரய ஆவண எண்.284/2024 மூலம் பெற்ற கிரயமானது நியாயமான கிரயம் என்றும், அவர் நியாயமான கிரயதாரர் என்றும் சொன்னால் சரியல்ல. 14.03.2024 தேதியிட்ட 3ம் பிரதிவாதியிடம் இருந்து 7ம் பிரதிவாதி 1ம் தபசில் சொத்தின் ஒரு பகுதியை கிரய ஆவண எண்.311/2024 மூலம் பெற்ற கிரயமானது நியாயமான கிரயம் என்றும், அவர் நியாயமான கிரயதாரர் என்றும் சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பிராது தபசில் சொத்தின் ஒரு பகுதியை பொறுத்து 1ம் பிரதிவாதிக்கு 27.06.2024 தேதியிட்டு ஆவண எண்.723/2024 படி பதிவு செய்து கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் நியாயமான ஆவணம் தான் என்று சொன்னால் சரியல்ல. 04.08.2024

Uploaded on 23.01.2026

தேதியிட்டு 1ம் பிரதிவாதி பிராது 1வது தபசில் சொத்தின் ஒரு பகுதியை 7ம் பிரதிவாதிக்கு ஆவண எண்.760/2024ன் படி செய்து கொடுத்த கிரயமும் நியாயமான கிரயம் தான் என்றும், 7ம் பிரதிவாதி நியாயமான கிரயதாரர் என்றும் சொன்னால் சரியல்ல. 7ம் பிரதிவாதி அவர் கிரயம் பெற்ற சொத்தை Equitas small Finance Bank Limited வங்கிக்கு அடமானம் வைத்ததை மேற்படி வங்கி எல்லா ஆவணங்களையும் முறையாக சரிபார்த்து தான் அடமானம் பெற்றார்கள் என்றும், மேற்படி அடமானமும் செல்லத்தகுந்த அடமானம் தான் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் கண்ட சொத்து விவரங்கள் எதுவும் சீர்திருத்த பிராதில் தனி சொத்து விவரங்களாக நான் காட்டவில்லை. நான் பிரதிவாதியை கஷ்டப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், வழக்கை தேவையில்லாமல் காலநீட்டிப்பு செய்ய வேண்டும் என்பதற்காகவும் தான் சீர்திருத்த பிராதை தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 7ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.)

<u>5ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

எனது தாயார் எனக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்ததை நான் சென்னையில் இருந்ததால் எனக்குத் தெரியாமல் ரத்து செய்துவிட்டார்கள். அதன் அடிப்படையில் தான் நான் வழக்கு போட்டிருக்கிறேன். செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். செட்டில்மெண்ட் ஆவணப்படி எனக்கு என் தாயார் அனுபவம் ஒப்படைக்கவில்லை என்றும், அதனால் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல.

செட்டில்மெண்ட் ஆவணம் வா.சா.ஆ.1 மூலமாக ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு வா.சா.ஆ..6 மூலமாக 3ம் பிரதிவாதிக்கு எனது தாயார் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் அடிப்படையில் அனுபவமும் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் தான் 5ம் பிரதிவாதி 5ம் தபசில் சொத்துக்களில் கண்ட 7 கடைகளை கிரயம் வாங்கியிருக்கிறார் என்றால் வழக்கு நடந்து வருகிறது என்று தெரிந்தே கிரயம் வாங்கியிருக்கிறார் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி 5ம் பிரதிவாதி தான் 7 கடைக்காரர்களிடம் வாடகையை வாங்கி அனுபவம் செய்து வருகிறார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. அந்த கடைகளில் இருந்து நான் வாடகை எதுவும் வாங்கவில்லை. கடைகள் அனைத்தும் 5ம்பிரதிவாதி அனுபவத்திலும் அதற்கு முன்பு அவருக்கு விற்பனை செய்த 3ம் பிரதிவாதி அனுபவத்திலும் தான் இருந்து வருகிறது என்றும், நான் கூட்டனுபவத்தில் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தான் அவர் பெயரில் தீர்வை செலுத்தி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி இந்த வழக்கில் அவசியமற்ற தரப்பினர் என்றும், அவரை தேவையில்லாமல் வழக்கில் சேர்த்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. அவருக்கு எதிராக நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்குக் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதிக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரமே தவறானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி நல்லெண்ண

கிரயதாரர்  என்றும், அதனால் அவர் பெற்ற கிரயம் செல்லத்தக்கது என்றும் சொன்னால்  சரியல்ல.

மறுவிசாரணை இல்லை